# எலஹர பிரதேச சபை
# பொலநறுவை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 01 இலேயே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 ஏப்ரல் 08 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் காணப்படுகின்ற என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்களை நோக்கில் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான எலஹர பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிக்க என்னால் முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகளின் பொழிப்பு கீழே தரப்படுகின்றன.

| | | விடயங்களின் எண்ணிக்கை | பெறுமதி<br>ரூபா |
|---|---|---|---|
| (i) | நிதிக் கூற்றுக்களிலுள்ள விடுபாடுகள் | 07 | 524,068 |
| (ii) | நிதிக் கூற்றுக்களில் குறைத்துக் கூறல்கள் | 01 | 110,368 |
| (iii) | நிதிக் கூற்றுக்களில் அதிகரித்துக் கூறல்கள் | 02 | 22,072,151 |
| (iv) | முறையற்ற வெளிப்படுத்தல்கள் | 05 | 636,747 |

#### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

உப பதிவேடுகளில் காணப்படுகின்றவாறு 4 விடயங்களின் மீதிகள் ரூபா 5,914,375 ஆன அதேநேரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி அந்த

மீதிகள் ரூபா 6,082,295 ஆனதுடன் இணக்கம் செய்யப்படாத மீதிகள் ரூபா 162,920 ஆகும்.

### 1.3.3. தொங்கல் கணக்குகள்

நிதிக் கூற்றுக்களின்படி 2008 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 28,233 தொகையான தொங்கல் கணக்கின் செலவு மீதிகள் மீளாய்வாண்டு இறுதியளவில் ரூபா 276,543 ஆல் அதிகரித்திருந்த போதிலும் அத்தொகையை இனங்கண்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்கய்விற்கான சான்றுகளின்மை

#### கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்காமை

கணக்காய்விற்கு தேவைப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்காமையால் ரூபா 36,053,242 மொத்தமான ஏழு விடயங்கள் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

### 1.3.5 இணங்காமைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமைகள் கணக்காய்வின்போத அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் 1988 | |
| விதிகள் 59 | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 150(i) ஆம் பிரிவின்படி ஒவ்வொரு ஆண்டின் மார்ச் 31 இற்கு முன்னர் சபையின் அதிகார எல்லையின் அளவீடு மற்றும் தொழில் அறிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளர்வாண்டிலும் தேவைப்பாடுகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள்

| | |
|---|---|
| (i) நிதிப்பிரமாணம் 156(1) | ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய பங்கிளப்புகள் அனுப்புவதிலுள்ள தாமதத்திற்காக செலுத்தப்பட்ட ரூபா 1,412 ஆன மிகைக் கட்டணம் பொறுப்புடைய உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 396 | 2010 திசெம்பர் மாதத்திற்கான 0005433459 ஆம் இலக்க வங்கிக் கணக்கின் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின்படி வழங்கப்பட்டு ஆனால் வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காத ரூபா 4,344 பெறுமதியான 3 காசோலைகள் நிதிப்பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 751 | (i) மீளாய்வாண்டில் சபையால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 178,400 பெறுமதியான பொருட்கள் பொருளிருப்பு பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை.<br>(ii) மீளாய்வாடிற்கான கணிப்பீட்டுச் சபை நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமான மிகை ரூபா 610,736 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 10,403,982 ஆக இருந்தது.

## 2.2. வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டு மற்றும் மன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பவற்றின் தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ள படியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய நிலுவை | மதிப்பிடப் பட்டது | உள்ள படியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய நிலுவை |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | இறைகளும் வரிகளும் | 602 | 576 | 688 | 678 | 336 | 603 |
| (ii) | குத்தகை வாடகைகள் | 1,336 | 1,257 | 274 | 1,331 | 1,710 | 272 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 115 | 82 | - | 190 | 71 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 18,460 | 12,637 | 4,492 | 13,435 | 1,228 | 350 |

### 2.2.2 நீதி மன்றத் தண்டப்பணம்

2010 திசெம்பர் 31 வரை பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதவான் நீதி மன்னத்தால் அறவிடப்பட்ட ரூபா 4,107,568 தொகையான தண்டப்பணங்கள் சபையால் அறிவிட வேண்டியிருந்தது.

### 2.2.3 முத்திரைக் கட்டணங்கள்

2006 முதல் 2008 திசெம்பர் வரை மற்றும் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளிற்காக அறவிடவேண்டிய முத்திரைக் கட்டணங்கள் தொடர்பில் அறவிடவேண்டியிருந்த ரூபா 156,700 தொகையான முத்திரைக் கட்டணங்கள் கணிப்பிடப்படு கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 வரி நிலுவைகள்**

(i) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வரி நிலுவைகள் ரூபா 687,700 ஆனதுடன் மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட வரி வருமானம் ரூபா 252,989 ஆகும். அத்தகையவாறு வரி வருமான சேகரிப்பின் முன்னேற்றம் குறைவான 27 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தியதனை அவதானிக்கப்பட்டது.

(ii) 339 வரி செலுத்துவோர்களிடமிருந்து 3 முதல் 10 ஆண்டு வீச்செல்லை கொண்ட காலத்திற்கு மேலாக இருக்கின்ற ரூபா 554,406 தொகையான வரி நிலுவைகளின அறவீட்டிற்காக சபையானது போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 5 அரசாங்க நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 323,111 தொகையான வரி நிலுவைகள் நீண்ட காலமாக அறவிடப்படாமல் இருந்தமை அதானிக்கப்பட்டது.

**2.2.5 வியாபார கடை வாடகைகளின் நிலுவை**

பஹமுன வராந்த சந்கைக்கு எதிரே வியாபார கடை இல 1 இலிருந்து ரூபா 58,742 தொகை 4 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் இருக்கின்ற வியாபாரக் கடை வாடகை 2010 மார்ச் 31 அளவில் கூட அறவிட முடியாதிருந்தது. இது தொடர்பில் சபையானது எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

**2.3 செலவினக் கட்டமைப்பு**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினம் முரண்களுடன் சேர்த்து கீழே தரப்படுகின்றன.

| செலவின விடயம் | பாதிடப் பட்டது | உள்ளபடி யானது | முரண் | பாதிடப் பட்டது | உள்ளபடி யானது | முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| **மீண்டெழும் செலவினம்** | | | | | | |
| ஆளணி வேதனங்கள் | 8,776 | 9,098 | (322) | 9,295 | 8,522 | 773 |
| ஏனையவை | 5,162 | 4,844 | 318 | 6,311 | 5,227 | 1,084 |
| உப மொத்தம் | 13,938 | 13,942 | (4) | 15,606 | 13,749 | 1,857 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மூலதனச் செலவினம் | 6,570 | 6,802 | (232) | 10,237 | 10,042 | 195 |
| முழு மொத்தம் | 20,508 | 20,774 | (236) | 25,843 | 23,791 | 2,052 |

## 2.4 மனிதவள முகாமைத்துவம்

அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியின் தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | ஊழியர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது |
|---|---|---|---|
| (i) | நிறைவேற்றுத் தரங்கள் | 01 | - |
| (ii) | துணைநிலைத் தரங்கள் | 05 | 04 |
| (iii) | சிற்றூழியர் தரங்கள் | 12 | 13 |
| (iv) | ஏனையவை (அமைய, சமயாசமய, தற்காலிக) | - | 17 |
| | | 18 | 34 |

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 19(I) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்படி உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் சபையின் அங்கீகரித்த பதவியணியை விஞ்சி தற்காலிக மற்றும் சமயாசமய பதவிகளிற்கு சேர்க்கப்பட்ட 17 ஊழியர்களிற்கு மீளாய்வாண்டில் சபை நிதிகளிலிருந்து ரூபா 2,494,950 தொகையான சம்பளங்களும் படிகளும் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 6 சமயாசமய ஊழியர்களைவிட மேற் குறிப்பிட்ட மிகையான பதவியணியினர் சபையால் பேணப்பட்ட மடுடுமன குடிநீர் செயற்திட்டம் மற்றும் நெநசல செயற்திட்டம் என்பவற்றிற்காக சேர்க்கப்பட்டிருந்த போதிலும் அவர்களுடைய நியமனத்திற்கும் முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட பௌதீக வளங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) சபையின் நிதிகளில் செலவு செய்யப்பட்டு ரூபா 1,114,240 கிரயத்தில் தாபிக்கப்பட்ட அரிசி மா உணவு உற்பத்தி மற்றும் மகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியங்கள் என்பவற்றிற்கான செயற்திட்டம் 2008 திசெம்பர் 28 இல் திறக்கப்ப்டிருந்த போதிலும். இது அன்றிலிருந்து 2 ஆண்டுகளிற்கு மேலாக பயனற்றிருந்தது.

(ii) அரிசி மா தொடர்புட்ட உற்பற்திகள் செயற்திட்டம் பயனற்றிருந்த போதிலும் இது மின்சாரம், தண்ணீர் என்பவற்றில் ரூபா 9,236 மற்றும் 2010 ஆம் ஆண்டு காவலாளியின் மாதாந்த சம்பளக் கொடுப்பனவு என்பவற்றிசைச் செலவழித்து பேணப்பட்ட செயற்திட்டம் நிறுத்தப்பட்டிருந்தது.

(iii) 2007 பெப்ரவரி 12 இல் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சால் விநியோகிக்கப்பட்ட மோட்டார் படகு மற்றும் பெரி என்பன 3 ஆண்டுகளிற்கு மேலாக பயனற்றிருந்ததுடன் அத்தகையவாறு அந்த இயந்திரங்கள் ஆபத்திற்கு உட்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. அத்தகைய அரசாங்க வளங்கள் வேறு ஏதாவது நிறுவனங்களிற்கு கிடைத்திருக்குமானால் அதிக வினைத்திறனான நோக்கங்களிற்கு பயன்படுத்த முடியும்.

## 2.6. செயலாற்றல்

### கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் இன்மை

(i) பொதுத் திறைசேரியின் 2010 மார்ச் 10 ஆந் திகதிய பிஎவ்/ஆர்/2/2/2/5(4) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.1 ஆம் பந்தியின்படி எதிர்காலத்தில் பிரதேச சபையின் விருத்திசெய்யப்பட்ட செயற்பாடுகளின் செயலாற்றல் வழிகளை வெளிபடுத்துகின்ற கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சபையின் நோக்கங்களை எய்துவதற்காக முறையான முகாத்துவ அணுகு முறைக்கு நிதி, மனித மற்றும் பௌதீக வளங்களை நெறிப்படுத்துகின்ற

மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் (நிதி மற்றும் பௌதீகம்) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் சோரப்படுகின்றன.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்

(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு